# கீழே பார்க்கும்

**அன்று : படிப்பைப் பாதியில் கைவிடும் மாணவர்களின் விகிதம் அதிகமாக இருந்த மாவட்டம் கிருஷ்ணகிரி. இன்று: அந்த மாவட்டத்தில் உள்ள ஒரு பள்ளி, யூனிசெஃபின் நட்சத்திர அந்தஸ்தை வென்றிருக்கிறது.**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருக்கிறது கொட்டுக்காரம்பட்டி. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, கல்வி கசந்த மாவட்டங்களாக அறியப்பட்ட மாவட்டங்களில் கிருஷ்ணகிரியும் ஒன்று. படிப்பை பாதியில் நிறுத்திவிடும் மாணவர்களின் சதவிகிதம், அப்போது மிக அதிகம் அங்கே.

'ஏழு தலைமுறைக்கு சொத்து இருக்கு. படிப்பு எதுக்கு?' என்று வசதி படைத்த மாணவர்களுக்கும், 'சோத்துக்கே வழியில்லை, படிப்பு ஒரு கேடா?' என்று ஏழை மாணவர்களுக்கும், அவரவர் நிலைக்கேற்ப கல்வியைப் பாதியில் கைவிட ஒருகாலத்தில் நியாயங்கள் கற்பிக்கப்பட்டன.

இன்று, அந்த மாவட்டத்தில் உள்ள கொட்டுக்காரம்பட்டி, ஐ.நா. சபையின் அமைப்பான யூனிசெஃப் நிறுவனத்தின் நட்சத்திர அந்தஸ்தை தொடர்ந்து பெற்று வருகிறது. ஒன்றல்ல இரண்டல்ல, ஒன்பது நட்சத்திர அந்தஸ்து.

அதென்ன நட்சத்திர அந்தஸ்து? யூனிசெஃப் சுகாதாரமான பள்ளிகளுக்கு நட்சத்திர அந்தஸ்து வழங்கி வருகிறது. அதிகபட்சமாக, ஒரு பள்ளிக்குப் பத்து நட்சத்திர அந்தஸ்து வழங்கப்படும். ஓர் அரசுப்பள்ளி நான்கு, ஐந்து புள்ளிகள் வாங்கினாலே, அதை சுகாதாரத்தில் ஓரளவு தன்னிறைவு பெற்ற பள்ளியாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், கொட்டுக்காரம்பட்டி நடுநிலைப் பள்ளி, கடந்த

■ யுவகிருஷ்ணா





# நட்சத்திரங்கள்

ஆண்டு பத்து நட்சத்திர அந்தஸ்தும், இவ்வாண்டு ஒன்பது நட்சத்திர அந்தஸ்தும் யூனிசெஃபிடம் இருந்து பெற்றிருக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை ஒன்றியத்தில் இருக்கிறது கொட்டுக்காரம்பட்டி. திருவண்ணாமலையில் இருந்து இருபுறம் அடர்ந்த வனங்களும், தூரத்தில் தெரியும் நீல மலைகளுமான சாலையில் சுமார் 50 கிலோ மீட்டர் பயணம் செய்தால், பாம்பாறு அணைக்கட்டுக்கு முன்பாக இடப்பக்கம் ஒரு சிறிய சாலை செல்லும். ஒரே ஒரு நகரப்பேருந்து மட்டுமே அத்திபூத்தாற்போல வந்து, செல்லும் அச்சாலையில் மூன்று, நான்கு கிலோ மீட்டர் நடந்து சென்றால் கொட்டுக்காரம்பட்டி.

வழியெங்கும் செங்கல் சூளைகள். 'ஒருகாலத்தில் இச்சூளைகளில் ஏராளமான குழந்தைகள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். பள்ளிக்கு அக்குழந்தைகளைத் திரும்ப அழைத்துவருவதே பெரும்பாடாக இருந்தது. இப்போது கிட்டத்தட்ட சூளைகளில் குழந்தைத் தொழிலாளர்கள் என்ற நிலையை எங்கள் மாவட்டத்தில் இருந்து விரட்டியடித்து விட்டோம், தலையை அடகுவைத்தாவது குழந்தைகளுக்கு கல்வியை வழங்கவேண்டும் என்ற விழிப்புணர்வு எங்கள் மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது' என்று கிராமவாசி ஒருவர் நமக்கு விளக்குகிறார்.

யூனிசெஃபின் நட்சத்திரங்களை வென்ற பள்ளியைச் சென்று பாரத்தோம். பளிச்சென்று இருக்கிறது. சுத்தமான மைதானம். பூந்தோட்டம். மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்துக் குப்பைத் தொட்டிகள் வைத்திருக்கிறார்கள். வகுப்பறை, மைதானம், தண்ணீர், கழிவறை, சத்துணவு கண்காணித்தல் என்று பள்ளியின் பராமரிப்புப் பணிகளை மாணவர்கள் தாங்களே குழு அமைத்துச் செய்கிறார்கள்.

பள்ளியின் பசுமைப்படை, தோட்ட வேலையைக் கவனித்துக் கொள்கிறது. அவ்வப்போது ஊரின் சுற்றுச்சூழல் தொடர்பான பணிகளையும் சிரமேற்கொண்டு செய்கிறார்கள். பள்ளியின் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் உடல்நலம், சுகாதாரம் தொடர்பான விஷயங்களைக் கவனித்துக் கொள்கிறது.

'அனைவருக்கும் கல்வித் திட்டம்' மூலமாக, வண்ணத் தொலைக்காட்சி மற்றும் மூன்று கணினிகள் கிடைத்திருக்கின்றன. இணைய வசதி இல்லாததால், தலைமையாசிரியர் தன்

> **யூனிசெஃபின் நட்சத்திரங்களை வென்ற பள்ளியைச் சென்று பார்த்தோம். பளிச்சென்று இருக்கிறது. சுத்தமான மைதானம். பூந்தோட்டம். மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று தரம் பிரித்துக் குப்பைத் தொட்டிகள் வைத்திருக்கிறார்கள். வகுப்பறை, மைதானம், தண்ணீர், கழிவறை, சத்துணவு கண்காணித்தல் என்று பள்ளியின் பராமரிப்புப் பணிகளை மாணவர்கள் தாங்களே குழு அமைத்துச் செய்கிறார்கள்.**












சொந்தப்பணத்தில் ஒரு 'டேட்டா கார்ட்' மூலமாக இணைய வசதி செய்து கொடுத்திருக்கிறார். குக்கிராமத்தில் அமைந்திருக்கும் இந்தப் பள்ளிக்கு பிரத்யேகமாக ஓர் இணையதளம் நடத்தப்படுகிறது என்பது அடுத்த ஆச்சரியம். பள்ளியின் அன்றாட நடவடிக்கைகள் மற்றும் நிகழ்ச்சிகள் www.pumskottukarampatti.blogspot.com என்ற இணையதளத்தில் அவ்வப்போது பதிவேற்றப்படுகிறது. கல்வித்துறை அதிகாரிகள் பலரும் அடிக்கடி விசிட் செய்யும் முக்கியமான இணையதளம் இது. பள்ளியின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க, அவர்களுக்கு இது உதவுகிறது.

நூற்றி இருபத்தி மூன்று மாணவ, மாணவியர் படிக்கிறார்கள். ஐந்து ஆசிரியர்கள். நாற்பத்தி இரண்டு வயது இளைஞரான ராஜேந்திரன் இப்பள்ளியின் தலைமையாசிரியர். தமிழிலக்கிய ஆர்வலரான இவருக்கு, இலக்கிய உலகில் வேறு ஒரு பெயரும் உண்டு. கவி செங்குட்டுவன்.

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இங்கே தலைமையாசிரியராகப் பொறுப்பேற்றேன். புதராக மண்டிக்கிடந்த பள்ளியின் சூழலை மாற்றியமைப்பது எனக்குச் சவாலாக இருந்தது. மாணவர்களின், ஊர்மக்களின் ஒத்துழைப்போடு என்னால் முடிந்த பணிகளைச் செய்தேன். அரசு அதிகாரிகளுக்கு மனுப் போட்டு நல்ல வகுப்பறைகள் கட்டினேன்.

நம் பள்ளி என்ற உணர்வு ஒவ்வொரு மாணவனுக்கும் இருப்பதால், காலை எட்டரை மணிக்கே வந்து, பள்ளி தொடர்பான அனைத்துப் பணிகளையும் அவனே செய்ய ஆரம்பித்து விடுகிறான். ஆரம்பத்தில் வழிகாட்டியதோடு சரி. அவனவன் பொறுப்பை அவனே உணர்ந்து செம்மையாகச் செய்கிறான். மகிழ்ச்சியோடு வேடிக்கை பார்க்கிறேன்!'' என்று தனக்குக் கிடைக்க வேண்டிய பாராட்டுகளையும், மாணவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கிறார்.

இப்பகுதியில் மக்களிடையே ஏற்பட்டிருக்கும் கல்வி விழிப்புணர்வு குறித்துத் தலைமையாசிரியர் ராஜேந்திரனிடம் பேசினோம். ''கல்வியைப் பொறுத்தவரை எங்கள் மாவட்டம் ஒரு காலத்தில் கேலியாகப் பார்க்கப்பட்டது உண்மைதான். அரசும், பல்வேறு அமைப்புகளும் இணைந்து இந்நிலையை இன்று மாற்றியிருக்கின்றன. கடந்த தலைமுறையில் கல்வி கற்ற என்னைப் போன்றவர்களும் எங்கள் மாவட்டத்து கல்வி வளர்ச்சிக்கு கடுமையாகப் பாடுபட்டு வருகிறோம். எங்களது அடுத்த தலைமுறை, எங்களைவிட உயர்வான கல்வி வளர்ச்சியைப் பெறவேண்டும் என்ற அக்கறையே இதற்குக் காரணம்!'' என்கிறார்.

பொதுவாக நாம் கவனித்தவகையில் 1989-90 காலக்கட்டத்தில், பத்தொன்பது, இருபது வயதுகளில் ஆசிரியராக, ஏராளமான இளைஞர்கள் பணி நியமனம் பெற்றிருக்கிறார்கள். போதிய அனுபவம் பெற்றுத் தலைமையாசிரியர்களாகப் பதவியேற்ற பல பள்ளிகளில் இதுபோன்ற வரவேற்கத்தக்க மகிழ்ச்சியான மாற்றங்களை தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகிறார்கள். புதிய தலைமுறை இளைஞர்கள், முற்போக்கான அணுகுமுறைகள் மூலமாக மாற்றங்களைப் படைக்கவல்லவர்கள் என்ற கூற்று அடுத்தடுத்து மெய்ப்பிக்கப்பட்டு வருகிறது.

தமிழகப் பள்ளிகளில் இப்போது ஆசிரியப்பணிக்கு ஏராளமான காலியிடங்கள் இருப்பதாக, நாம் செல்லும் இடங்களிலெல்லாம் அறியமுடிகிறது. இருபதாண்டுகளுக்கு முன்பு இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்கியதைப்போல, இப்போதும் உடனடியாக அப்பணிகளுக்கு இளைஞர்களை அரசு நியமிக்க வேண்டும். அப்படி நியமிக்கும் பட்சத்தில், அடுத்த இருபதாண்டுகளில் தமிழ்நாடு முழுக்க நூற்றுக்கணக்கான நட்சத்திரப் பள்ளிகளை நாம் பெற்றிருப்போம். இது உறுதி.

**படங்கள் : லக்கிலுக்**

---

**இப்படிச் செய்யலாமே...**

# கல்விக்கு 1 ரூபாய்

**வ**றுமையில் உள்ள மாணவர்கள், கல்வியில் சிறந்து விளங்கினாலும் வசதி இல்லாத காரணத்தால் மேற்படிப்பைத் தொடரமுடியாமல் போவது, நம் நாட்டில் வெகு சகஜமாக இருக்கிறது.

தனி மனிதக் கல்வி வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனி மனிதரும்கூட உதவ முடியும். வங்கி ஊழியர், அரசு ஊழியர், பொதுத்துறை ஊழியர், சுயதொழில் செய்வோர், தனியார் நிறுவனத்தில் பணிபுரிவோர் என நம்மில் பல பிரிவு உள்ளது. இதில் அரசு ஊழியர்களின் எண்ணிக்கை மட்டுமே 13 லட்சம். இதில், தலைமைச் செயலர்முதல் சத்துணவு உதவியாளர்வரை அனைவரும் அடங்குவர். அவர்கள் ஒவ்வொரு மாதமும் 1 ரூபாய் மட்டும் வழங்கினால் போதும். மாதம் ஒன்றுக்கு 13 லட்ச ரூபாய் சேரும். ஒரே வருடத்தில் வங்கி வட்டியுடன்




சுமார் ஒரு கோடியே அறுபது லட்ச ரூபாயாக உயரும். இதன்மூலம் நூற்றுக்கணக்கானோருக்கு சிறந்த கல்வியைத் தரமுடியும். இத்திட்டத்தின் செயல்பாட்டைக் காணும் இதர பொதுத்துறை மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களும் தாங்களும் நிதியளிக்க தாமாக முன்வரலாம்..

நிதி முறைகேடுகள் ஏற்படா வண்ணம் கண்காணித்து செயல்பட்டால், இது நிச்சயம் ஒரு சிறந்த திட்டமாக உருவெடுக்கும். இந்தத் திட்டத்தின் மூலம் திறமையான அனைவருக்கும் கல்வி கிடைப்பதோடு, அறக்கட்டளையின் உதவியோடு படிப்பவர்கள், பின்னாளில் பலருக்கு உதவி செய்ய முன்வருவர். இதையெல்லாம்விட ஒரு ஏழைக்கு கல்வி கொடுத்த மனநிறைவு நமக்கு ஏற்படும்.

**-சு.சிவக்குமார், மதுரை.**